**இலங்கையில் கருத்திற்கொள்ளவேண்டிய அனர்த்த இடர் முகாமைத்துவத்திற்கான அனர்த்த குறைப்பு மற்றும் மீட்சி ஆதரவிற்கான உலகளாவிய வசதிகள் செயற்திட்டம் - 2015**

---

இலங்கையில் கருத்திற்கொள்ளவேண்டிய அனர்த்த இடர் முகாமைத்துவத்திற்கான அனர்த்த குறைப்பு மற்றும் மீட்சி ஆதரவிற்கான உலகளாவிய வசதிகள் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூலை 11 ஆந் திகதிய ரீஎவ்-016699 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் நியம நிபந்தனையின் 2.07 (பீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. அனர்த்த இடர்களை முன்வைக்கின்ற பொருத்தமான கொள்கை மற்றும் செயற்பாட்டுரீதியான பதில்களை மதிப்பிடல், கணக்கிடல் மற்றும் முறைப்படுத்துதல் என்பவற்றிற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அதன் ஆதிக்க எல்லையின் கீழுள்ள முகவர்கள் மற்றும் இனங்காணப்பட்ட பொருத்தமான அக்கறையுடையோர்களின் தொழில்நுட்பரீதியான இயலளவுகளை கட்டியெழுப்புதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 54.6 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 420,000 ஆன செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தை சர்வதேச அபிவிருத்திச் சங்கமானது வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 யூன் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 05 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. பின்னர், 2015 திசெம்பர் 31 வரை செயற்திட்டக் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப முற்பணம், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப முற்பணம், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 22 ஆம் திகதியிலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதல் கணக்கீட்டு ஆண்டின் போதான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 420,000 | 54.60 | 52.50 | 87,630 | 12.36 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரிசை அமைச்சுக்களின் பொறுப்புக்களின் மாற்றங்கள் காரணமாக நன்கொடை முகவரால் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியின் போது உள்நாட்டு வர்த்தக வங்கியொன்றில் பதவிக்குரிய வங்கிக் கணக்கொன்றை திறக்க முடியாதிருந்ததுடன் அதன் விளைவால் செயற்திட்ட நடவடிக்கைகள் 2015 பெப்ரவரி மாதத்தில் காலதாமதத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆகையால், ரூபா 54.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர்

420,000 மொத்த ஒதுக்கீட்டில் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 12.36 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 87,630 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கு கிடைத்த ரூபா 34.09 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 240,500 ஆரம்ப முற்பணத்தில் ரூபா 21.99 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 152,870 மானியத்தின் செலவிடப்படாத பெறுகைகள் 2016 பெப்ரவரி 03 இல் செயற்திட்டத்தின் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) காலாண்டு ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் செயற்திட்ட முழுக் காலப்பகுதியையும் மேவி விபரமான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் கண்காணிப்பு நோக்கங்களிற்காக பொறிமுறையொன்றும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய திட்டம் மற்றும் பொறிமுறை என்பன செயற்திட்டத்தின் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் மானியப் பெறுகைகளை பயன்படுத்தக்கூடிய வகையில் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்குமான கட்டுப்பாட்டின் முறையான கருவிகளாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

---

செயற்திட்டத்தின் விபரமான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள நகரங்களின் அனர்த்த இடர் மதிப்பீடு, மண்சரிவு இடர் முகாமைத்துவம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழான முகவர்களின் பதவியணிகளின் இயலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் செயற்திட்ட அமுல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு நோக்கங்கள் ஆகிய பெயர்களில் 04 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள நகரங்களின் அனர்த்த முகாமைத்துவ இடர் மதிப்பீட்டின் அபிவிருத்தி மீதான நடவடிக்கைகள் மற்றும் அனர்த்தத்தின் பின்னரான தேவைகளின் மதிப்பீடு, முன்னெச்சரிக்கை முறைமை போன்ற அனர்த்த முகாமைத்துவத்தின் முக்கிய பகுதிகளில் விரிவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் என்பன செயல்நடவடிக்கைத் திட்டங்களின் அமுலாக்கலின் மெதுவான தன்மை காரணமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், மண்சரிவு முன்னெச்சரிக்கை முறைமையொன்றின் அபிவிருத்தி தொடர்பான வேலைகள் 2015 திசெம்பர் 15 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் இரத்தினபுரி மற்றும் மொனராகலையின் மண்சரிவு நிரூபிக்கப்பட்ட மாவட்டங்களில் ரூபா 12.05 மில்லியன் கிரயத்தில் 15 தானியங்கி மழை அளவைகள் செயற்திட்டக் காலப்பகுதியின் போது நிறுவப்பட்டிருந்தன.